## 6. அறிக்கை அளித்தல்

சட்ட விதிகளின் ஆய்வுக் குழுவின் முதலாவது, இரண்டாவது அறிக்கைகள்—அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. விஜயராகவன், சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் உறுப்பினர் மேற்படி குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது (ஆறுவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிப்பார்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளைக் குழுத்தலைவரின் சார்பாக இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) கிராம உத்யோகஸ்தர்கள் சங்கத்தின் போராட்டம் குறித்து அரசு அறிக்கை அளிப்பது குறித்து.

திரு. துரை முத்துச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் நடத்துகின்ற போராட்டம் சம்பந்தமாக இன்றையதினம் அறிக்கை கொடுப்பதாக சட்டமன்றத்திலே சொன்னார்கள். அதை அறிவிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் இன்றைக்கு அறிவிப்புத் தருவதாகச் சொல்லவில்லை. பத்திரிகையிலே செய்தி வந்தது என்றால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.